# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

பெருமையை எங்களுக்குத் தேடித் தந்து, நெஞ்சை நிமிர்த்திப் பேச வைத்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்களாகிய உங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்வது, அச்சப்படாதீர்கள்! தயங்காதீர்கள்! காடு எதுவாக இருந்தாலும், சிங்கம்தான் அங்கு Single! சிங்கம் தான் அங்கு ராஜா! அதுபோன்று, எளிய பின்னணியில் இருந்து பெரிய உயரத்திற்கு முயற்சியால் வந்திருக்கக்கூடிய நீங்கள்தான் அங்கே Real Hero! உங்கள் கெத்தைக் காண்பித்து ஜெயித்து வாருங்கள். உங்களை தூக்கி வைத்துக் கொண்டாட நாங்களும், இந்த உலகமும் தயாராக இருக்கிறது!

**தொலைநோக்குப் பார்வையோடு தயாரிக்கப்பட கல்வி அறிக்கை!**

இந்த பெருமைமிகு விழாவில் தமிழ்நாட்டின் மாநிலப் பள்ளிக் கல்விக் கொள்கை 2025ஐ வெளியிட்டது பெருமகிழ்ச்சி! தமிழ்நாட்டுக்கு என்று எல்லாவற்றிலும் ஒரு Unique Character இருக்கிறது. முற்போக்கான சிந்தனை இருக்கிறது! அதை அடிப்படையாக வைத்து, எதிர்காலத்திற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வையோடும் இந்தக் கல்விக் கொள்கையை உருவாக்கியிருக்கிறோம்! இதில் Highlightஆக சில Pointகளை சொல்ல விரும்புகிறேன்.

இந்த கல்விக் கொள்கை மூலமாக, படித்து, மனப்பாடம் செய்வதைவிட சிந்தித்து, கேள்வி கேட்கின்ற மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலை வழங்க இருக்கிறோம்! தொழில்நுட்ப மனம் படைத்தவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! படிப்பவர்களாக மட்டுமல்ல, படைப்பாற்றல் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! கல்வியோடு உடற்பயிற்சியும் இணைக்கப்படும்! தாய்மொழி தமிழ் நம்முடைய அடையாளமாக பெருமிதமாக இருக்கும்! முக்கியமாக தமிழும் ஆங்கிலமும் என்கிற இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கையாக இருக்கும்! மீண்டும் சொல்கிறேன்.... இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கை!

**வாழ்க்கைக்கு வழிகாட்டும் 'நான் முதல்வன்' திட்டம்!**

ஒவ்வொரு ஒன்றியத்திலும், புதிய மாதிரி வெற்றிப் பள்ளிகள் அமைக்கப்படும்! உண்டு உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்படும்! கல்வித் தொலைக்காட்சியும், மணற்கேணி செயலியும் 'ஒவ்வொரு வீடும் ஒரு வகுப்பறை' என்ற நிலையை உருவாக்கும்! மதிப்பெண்களாக இல்லாமல் மதிப்பீடுகளை நோக்கிய பயணமாக, தேர்வு முறை அமையும்! பசுமைப் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும். நான் முதல்வன் திட்டம் வேலைக்கு வழிகாட்டுவதாக மட்டுமல்லாமல், வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக அமையும்!

இப்படி, கல்வித் துறையில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவர இருக்கிறோம். ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்றால், "அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உயர்தரக் கல்வி"! இதுதான், நம்முடைய திராவிட மாடல் அரசின் கல்விக் கொள்கை!

**அறிவுக் கல்வியை அறிமுகம் செய்வோம்!**

பள்ளிகள் எல்லோருக்குமானது! அங்கு யாருக்கும் தடை இல்லை! தடுக்கப்படவும் விடமாட்டோம்! யாரும் புறக்கணிக்கப்படக் கூடாது! கல்விப் பாகுபாட்டை நீக்குவோம்! நீங்கள் விரும்புகின்ற கல்வியைப் பெறுவதற்கான வாசலை, நம்முடைய கல்விக் கொள்கை திறந்து வைக்கும்! கல்விச் சமத்துவத்தை உருவாக்குவோம்! அறிவுக் கல்வியை அறிமுகம் செய்வோம்! முக்கியமாக அது பகுத்தறிவுக் கல்வியாக இருக்கும்! அறிவியலுக்குப் புறம்பான பிற்போக்குச் சிந்தனைகள் பள்ளிகளில் நுழைய அனுமதிக்க மாட்டோம்!

நம்முடைய மாணவர்கள் உலகளவில் போட்டி போட்டு, வெற்றி பெற இந்த மாநிலக் கல்விக் கொள்கை துணையாக இருக்கும்! மொத்தத்தில், கல்வியில் முன்னணி மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டை மேலும் முன்னேற்றுவோம்! கல்வி மூலமாக, எதிர்காலத்தில் நீங்கள் எல்லோரும் பெரிய பெரிய அதிகாரிகளாக, அரசியல் தலைவர்களாக, அறிவியலாளர்களாக, மருத்துவர்களாக, சட்ட அறிஞர்களாக, பொறியாளர்களாக, கலைஞர்களாக உருவாகி, உங்கள் வீட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும்! இதுபோன்ற இன்னொரு மேடையில், உங்களை எடுத்துக்காட்டாகச் சொல்லி, மற்றவர்களை ஊக்கப்படுத்தும் அளவுக்கு நீங்களும் உயர வேண்டும், உயர வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

> **இ**ந்த கல்விக் கொள்கை மூலமாக, படித்து, மனப்பாடம் செய்வதைவிட சிந்தித்து, கேள்வி கேட்கின்ற மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றலை வழங்க இருக்கிறோம்! தொழில்நுட்ப மனம் படைத்தவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! படிப்பவர்களாக மட்டுமல்ல, படைப்பாற்றல் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்! கல்வியோடு உடற்பயிற்சியும் இணைக்கப்படும்! தாய்மொழி தமிழ் நம்முடைய அடையாளமாக பெருமிதமாக இருக்கும்! முக்கியமாக தமிழும் ஆங்கிலமும் என்கிற இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கையாக இருக்கும்! மீண்டும் சொல்கிறேன்.... இருமொழிக் கொள்கைதான் நம்முடைய உறுதியான கொள்கை!

# அமைச்சர் துரைமுருகன் அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்தும் கேள்வி கேட்டும் அதனை மதிக்காமல் வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையை மேற்கொண்டது தேர்தல் ஆணையம்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்கிற பெயரில் நாட்டு மக்களின் குடியுரிமையைச் சோதித்துப் பார்க்கும் நடவடிக்கையாகவே தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளது. ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட ஆதார் அடையாள அட்டையையும், தேர்தல் ஆணையமே கொடுத்த வாக்காளர் அடையாள அட்டையையுமே கூட வாக்காளர் தகுதிக்கான அடையாளமாக ஏற்றுக் கொள்ளாமல் மக்களைத் திணறடித்தது தேர்தல் ஆணையம். உச்ச நீதிமன்றம் அவற்றையும் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்திய பின்பும் அதனைப் புறக்கணித்து அராஜகம் செய்துள்ளனர்.

**ஒருதலைப்பட்ச நடவடிக்கை!**

தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையினால் பீகாரில் 65 லட்சம் பேர் தங்களது வாக்குரிமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் 36 இலட்சம் பேர் வேலைகளுக்காக வேறு மாநிலங்களுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலைக்காகத் தற்காலிகமாக வெளியூர் சென்றவர்களை எல்லாம் எந்தவிதக் கேள்வியுமின்றி நீக்கி உள்ளனர். அதோடு அவர்கள் வசிக்கும் மாநிலங்களின் வாக்காளர் பட்டியலில் தங்களை இணைந்து கொள்ளலாம் என மற்றொரு அதிர்ச்சிகரமான தகவலையும் தெரிவித்திருக்கிறது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையத்தின் இந்த SIR நடவடிக்கையினால் பெரியளவில் ஏழை எளிய மக்களும் , சிறுபான்மையின மக்களும், பெண்களும் தங்களது வாக்குரிமையை இழக்கும் அபாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதோடு போலி வாக்காளர்களையும் அதிகளவு சேர்த்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத நபர்கள் பல பேர் ஒரே வீட்டில் வசிப்பதாக வாக்காளர் பட்டியலில் பதிவாகி உள்ளது. SIR என்பது முறைகேட்டைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படுகிறது என்றால் இந்த முறைகேடு எப்படி நடந்தது? முறைகேட்டைக் களைவதாகச்சொல்லிக் கொண்டு முறைகேட்டைத் தேர்தல் ஆணையம் செய்யலாமா? SIR என்ற முறையற்ற வாக்காளர் திருத்த நடவடிக்கையைத் தேர்தல் ஆணையம் உடனடியாகக் கைவிட வேண்டும்.

**தமிழ்நாட்டிலும் பாதிப்பு ஏற்படும்!**

அடுத்த ஆண்டு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் சூழலில், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாட்டிலும் மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ்நாட்டு வாக்காளர்கள் தங்களது வாக்காளர் தகுதியை நிரூபிக்க வேண்டும் எனும் பெயரால் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதே போல முறையற்ற வகையில் லட்சக்கணக்கான பிற மாநில மக்களைத் தமிழ்நாட்டில் சேர்க்கும் சதி திட்டத்தையும் ஒன்றிய பாஜக அரசு மேற்கொள்ளக் கூடும் . இது தமிழ்நாட்டின் அரசியல் உரிமையையே அபகரிக்கும் செயல்.

நாட்டில் ஜனநாயகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் அரசியல் உரிமைக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் இந்த விவகாரத்தில் வாய்மூடி கள்ள மௌனம் காத்து தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய துரோகத்தைச் செய்து கொண்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. பாஜகவின் அடிமையாய் மாறி, அதிமுக வை அடமானம் வைத்தவர், தமிழ்நாட்டு வாக்காளர்களையும் டெல்லியிடம் அடமானம் வைக்கத் துணிந்துவிட்டாரா? இல்லை என்றால் SIR என்ற முறைகேடான வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி இதுவரை வாய் திறக்காதது ஏன்?

தமிழ்நாட்டில் அரசியல் ரீதியாகப் போராடி வெற்றி பெற முடியாத அடிமைகளும் அவர்கள் எஜமானர்களும் குறுக்கு வழியில் வெற்றி பெற்று விடலாம் என்று கனவு கண்டால், அது ஒரு போதும் நடக்காது. முதலமைச்சர் மு.க, ஸ்டாலின் அவர்களோடு தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் திரண்டு நின்று சதிகார கும்பலை விரட்டி அடிப்பார்கள்.

இவ்வாறு கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இந்திய அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

# அரசு நிறுவனங்களில் உள்ள பதவிகளில் 5% இடஒதுக்கீடு அனாதைகளுக்கு ஒதுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

## மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!

புதுடெல்லி, ஆக 9-

இந்திய அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அரசு நிறுவனங்களில் உள்ள பதவிகளில் 5% இடஒதுக்கீடு அனாதைகளுக்கு ஒதுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

உயிரியல் பெற்றோருடன் உள்ள குழந்தைகளுக்கு இணையான ஆரோக்கியமான வளர்ப்பை உறுதி செய்வதற்காக அனைத்து அனாதை குழந்தைகளுக்கும் அரசாங்கம் சமூக பாதுகாப்பை வழங்குகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

சுரண்டல் மற்றும் தவறான சிகிச்சையில் இருந்து பாதுகாப்பின் விவரங்கள், அமைதியான வாழ்க்கையை உறுதி செய்வதற்கும், சமுதாயத்தில் மரியாதைக்குரிய பங்களிப்பை வழங்கும் வயது வந்தோராகவும் மாற்றுவதற்கு அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.



பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தில் மாநில அமைச்சர் ஸ்ரீமதி சாவித்ரி தாக்கூர் கூறியதாவது :-

தற்போது அத்தகைய திட்டம் எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (ஜேஜே சட்டம், 2015), 2021 இல் திருத்தப்பட்டது, இது குழந்தைகளின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கான முதன்மைச் சட்டமாகும். இது அவர்களின் அடிப்படைத் தேவைகள், பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வழங்குகிறது. சட்டம் மாநில மற்றும் மாவட்ட அளவில் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், குழந்தைகள் நலன் உள்ளிட்ட சட்டரீதியான கட்டமைப்புகளை உருவாக்குகிறது. குழுக்கள், சிறார் நீதி வாரியங்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள். இது குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை நிறுவுவதற்கும் வழங்குகிறது.

சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 இன் பிரிவு 27-30 (2021 இல் திருத்தப்பட்டது) அனாதைகள், கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் சரணடைந்த குழந்தைகள் உட்பட அவர்களின் சிறந்த நலனைக் கருத்தில் கொண்டு, கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் குறித்து முடிவெடுக்க அதிகாரம் பெற்ற குழந்தைகள் நலக் குழுக்களுக்கு (CWCs) வழங்குகிறது. CCI களின் செயல்பாட்டை கண்காணிக்க CWC களும் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளன. JJ சட்டம், 2015 இன் பிரிவு 04-09, சட்டத்திற்கு முரணான குழந்தைகளின் நலனுக்காக முடிவுகளை எடுக்க அதிகாரம் பெற்ற சிறார் நீதி வாரியங்களுக்கு வழங்குகிறது.

அனாதை குழந்தைகள் உட்பட கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முன் வரையறுக்கப்பட்ட செலவு பகிர்வு அடிப்படையில் அனைத்து மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 'மிஷன் வாத்சல்யா' என்ற மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் நிறுவன பராமரிப்பு, நிறுவன சாராத பராமரிப்பு மற்றும் அவுட்ரீச் சேவைகளை வழங்குகிறது. மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் (CCIs) மற்றவர்களுக்கு இடையேயான, வயதுக்கு ஏற்ற கல்வி, தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு, சுகாதாரம், ஆலோசனை போன்றவற்றை வழங்குகின்றன. மாநில வாரியாக குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் குழந்தைகள் மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ் 2024-25 நிதியாண்டில் ஆதரிக்கப்படும் என்று கூறினார்.

### குறு மற்றும் சிறு தொழில்கள் – கிளஸ்டர் மேம்பாட்டு திட்டம் கீழ்

# பொதுவான உள்கட்டமைப்பு மையங்களை நிறுவ அமைச்சகம் ஆதரவு வழங்க திட்டமிட்டுள்ளதா?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக 9-

வேளாண்மை சார்ந்த மதிப்புக்கூட்டு உற்பத்தி பிரிவுகள் மற்றும் பாரம்பரிய நெசவு பகுதிகளுக்காக குறு மற்றும் சிறு தொழில்கள் - கிளஸ்டர் மேம்பாட்டு திட்டம் (Micro and Small Enterprises - Cluster Development Programme) MSE-CDP கீழ் பொதுவான உள்கட்டமைப்பு மையங்களை (Common Facility Centres - CFCs) நிறுவ அமைச்சகம் ஆதரவு வழங்க திட்டமிட்டுள்ளதா? வேளாண்மை சார்ந்த மதிப்புக்கூட்டு உற்பத்தி பிரிவுகள் மற்றும் பாரம்பரிய நெசவுத் பகுதிகளுக்காக குறு மற்றும் சிறு தொழில்கள் - கிளஸ்டர் மேம்பாட்டு திட்டம் (Micro and Small Enterprises - Cluster Development Programme) MSE-CDP கீழ் பொதுவான உள்கட்டமைப்பு மையங்களை பொதுவான வசதி மையங்கள் (Common Facility Centres - CFCs) நிறுவ அமைச்சகம் ஆதரவு வழங்க திட்டமிட்டுள்ளதா வழங்கப்படுகிறதெனில், ஜூன் 2025 நிலவரப்படி ஒப்புதல் பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் மற்றும் செயலாக்க நிலையில் உள்ள CFC திட்டங்கள் மாநிலம்/



UT- வாரியாக அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு விவரங்கள் என்ன? என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் பதில் வருமாறு :-

அமைச்சகத்தின் குறு மற்றும் சிறு தொழில்கள் - கிளஸ்டர் மேம்பாட்டு திட்டம் (Micro and Small Enterprises - Cluster Development Programme) MSE - CDP என்பது அடிப்படை தேவைகளுக்காக இயக்கப்படும் திட்டமாகும். இதில் ஒவ்வொரு மாநிலம் - யூனியன் பிரதேசங்களும் தங்களின் மாநில தேவைக்கேற்ப துறைகள் - கொத்துகள் (Sectors - Clusters) களை குறிப்பாக விவசாய அடிப்படையிலான செயலாக்கம் (Agro Based Processing) மற்றும் பாரம்பரிய ஜவுளி கிளஸ்டர்கள் (Traditional Textile Clusters) ஆகியவற்றில் பொது பயன்பாடு மையங்கள் (பொது வசதி மையம்) [Common Facility Centre (CFCs)] அமைப்பதற்கான திட்டங்களை ஒன்றிய அரசுக்கு முன்மொழிகின்றனர். அதில், Value Added Agro-based Processing மற்றும் Traditional Textile Clusters ஆகியவற்றுக்கான பொது பயன்பாடு மையம் திட்டங்கள் ஒப்புதல் பெற்று செயல்பாட்டில் மற்றும் செயலாக்கத்தில் உள்ளவை. அதன் விவரங்கள் ஜூன் 2025 நிலவரம் படி மாநிலம் - யூனியன் பிரதேசங்கள் வாரியாகவும் அவற்றின் நிதி ஒதுக்கீடுகளுடன் இணைப்பாக (Annexure I) வழங்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசு கூறியுள்ளது.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

# கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் 7 அடி உயரத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி!

## கே.கருணாகரன் தலைமையில் சி. பாலாஜி. எம். என். அஜய் தென்னவன் முன்னிலையில் தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள்!

மாதவரம், ஆக 9-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, ஏழு அடி உயரத்தில் மெழுகு வத்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் சமுதாய கூட வளாகத்தில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவப்படம் அலங்கரித்து அமைக்கப்பட்டு, திருவுருவப்படத்திற்கு எதிரே ஏழு அடி உயரத்தில் மெழுகுவத்தி ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

17-வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, வி. பார்த்தசாரதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன் , பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் மாவட்ட அயலக துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, எஸ். சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு எதிரே அமைக்கப்பட்ட ஏழு அடி உயர மெழுகுவர்த்தியை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்றி வைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞரின் புகழ் ஓங்குக என கோஷங்களை எழுப்பி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து கழகத்தினரும், தூய்மை பணியாளர்களும் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்கள் 150 பேருக்கு புடவைகள் மற்றும் வடை, பாயாசத்துடன் அறுசுவை சைவ உணவு வாழை இலையில் பரிமாறப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பாக முகவர்கள் டி. திவாகர், எம். மைக்கேல்,பி. செந்தில், டி. மாதவன், அரியலூர் வினோத், நாகராஜ், ராஜ்குமார், பெரியார் நகர் சஞ்சய்,விஜய், தீயம்பாக்கம் ஜான்சன், பூபாலன், சுதர்சன், கொசப்பூர் சுமிர், விஷ்ணு, கார்த்திக், ராகேஷ், வக்கீல் எம். என். தளபதி, முனிவேல், கமலநாதன், சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 7 அடி உயரத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. 150 தூய்மை பணியாளர்களுக்கு புடவை மற்றும் அறுசுவை சைவ உணவு வழங்கிய இந்த நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமை தாங்கினார். வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச் .பீர் முகமது, பாக முகவர்கள் டி. திவாகர், எம். மைக்கேல்,பி. செந்தில், டி. மாதவன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகர் அண்ணா சிலை அருகில் ஏழை எளியோருக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் க.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். டி. இ. ஆதிசேஷன், கிழக்கு ஒன்றிய செயலாளர் க. அரிகிருஷ்ணன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி. கே. நாகராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் என். நந்தகோபால், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், ஒன்றிய நிர்வாகிகள் வி. ராஜசேகர், சி.ஆர். குமரன், கொப்பூர் டி.திலீப்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர். மோகனசுந்தரம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே. ஏ. மதியழகன், பெருமாள், எம். சேகர், தமிழ்ச்செல்வன், எம். சங்கர், கே. ஏ. சத்யா, சுப்பிரமணி, ராஜன், ராம்கி, திராவிட மணி, தனசேகர், ராமதாஸ்,முத்து, டில்லி, பஞ்சாட்சரம், சி. ஆர். மணிகண்டன், அன்பு, உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.